**நாமக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 2618 /ஆ1 /2023 நாள். 17.04.2023**

பொருள்: பள்ளிக்கல்வி – மறுநியமனம் – 2022–2023 ஆம் கல்வியாண்டு– அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் – கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு கல்வி ஆணடில் கடைசி வேலை நாள் வரை (Upto the end of Academic Session) தேவைப்படும் ஆசிரியர்களுக்கு மறுநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது– தற்போது மறுநியமனத்தில் பணிபுரியும் ஆசிரியர்களை நடப்பு கல்வியாண்டின் கடைசி வேலை நாளன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்க ஆணையிடுதல் –சார்பு

பார்வை: அரசாணை (நிலை)எண் 115 பள்ளிக் கல்வித் (பக5(2))துறை நாள்.28.06.2022

(((((0)))))

பார்வையில் காணும் அரசாணையின்படி அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் , கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு கல்வி ஆணடில் கடைசி வேலை நாள் வரை (Upto the end of Academic Session) தேவைப்படும் ஆசிரியர்களுக்கு மறுநியமனம் வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நடப்பு கல்வியாண்டின் (2022–2023) இடையில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற இருந்த ஆசிரியர்களுக்கு கல்வி ஆண்டின் கடைசி வேலை நாள் வரை (Upto the end of Academic Session) மறுநியமன காலத்தில் பணிபுரிய இவ்வலுவலக செயல்முறைகளின் வாயிலாக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து தற்போது 2022–2023 ஆம் கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற இருந்த நிலையில் , மறுநியமன காலத்தில் பணிபுரிய அனுமதி ஆணை பெற்று தொடர்ந்து பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களையும் பார்வையில் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு நடப்பு கல்வியாண்டின் கடைசி வேலை நாளன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்குமாறும் , மேலும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை பணியில் இருந்து விடுவிக்கப்பட்டமைக்கான அறிக்கையினை உடன் இவ்வலுவலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் சார்ந்த அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு –பார்வையில் காணும் அரசாணை நகல்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
நாமக்கல்.

17/04/2023

பெறுநர்

சார்ந்த அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்
நாமக்கல் மாவட்டம்.

நகல்– மாவட்டக்கல்வி அலுவலர் ( இடைநிலை), நாமக்கல் மாவட்டம்.

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – மறுநியமனம் - அரசு/அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் - கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு கல்வி ஆண்டில் கடைசி வேலை நாள் வரை (Upto the end of Academic Session) தேவைப்படும் ஆசிரியர்களுக்கு மறுநியமனம்– ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[பக5(2)]துறை**

அரசாணை (நிலை) எண்.115,

நாள் 28.06.2022
(திருவள்ளுவராண்டு 2053,
சுப கிருது வருடம், ஆனி 14 )

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.249, பள்ளிக்கல்வித் துறை, நாள்.9.2.1959.
2. அரசாணை (நிலை) எண்.1643, பள்ளிக்கல்வித் துறை, நாள்.27.10.1988.
3. அரசாணை (நிலை) எண்.170 பள்ளிக் கல்வி (பக5(2) துறை, நாள் 23.10.2014.
4. அரசாணை (நிலை) எண்.261, பள்ளிக் கல்வி (பக5(2) துறை, நாள் 20.12.2018.
5. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.35593/ சி2/இ2/2022, நாள் 27 .05.2022.

------

**ஆணை :-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு/அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட முன்நிபந்தனைகளின் அடிப்படையில் மறுநியமனம் வழங்குவதற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.:-

I) ஆசிரியர்களின் பண்பு மற்றும் நடத்தை திருப்திகரமாக இருத்தல் வேண்டும்.

II) தொடர்ந்து பணிபுரியும் வகையில் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கண்ட இரு நிபந்தனைகளுடன் பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளுக்கு ஓராண்டிற்கு முன்னர் ஆசிரியரின் ஓய்வூதிய கருத்துருக்கள் மாநில கணக்காயருக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கூடுதலாக, மூன்றாவது நிபந்தனை விதித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2003ஆம் ஆண்டு முதல் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் நடைமுறைக்கு வந்ததை முன்னிட்டு 2003ஆம் ஆண்டிற்கு பிறகு நியமனம் பெற்று பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ்வரும் ஆசிரியர்களுக்கு பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளுக்கு ஓராண்டுக்கு முன்னர் ஓய்வூதிய கருத்துருக்கள் மாநில கணக்காயருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனை பொருந்தாது என்பதால் அவர்களுக்கு அந்நிபந்தனையினை தளர்வு செய்து அவர்களுக்கு மறுநியமனம் அளிக்கும் போது ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடைசியாக பெற்ற ஊதியமே மறுநியமன காலத்திற்கு ஊதியமாக வழங்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு / அரசு நிதி உதவி பெறும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் - உபரி ஆசிரியர்களில் கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு கல்வியாண்டு இறுதிவரை மறுநியமனம் அளிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதத்தில், நடப்பு கல்வியாண்டு (2022-2023) முதல் அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கல்வியாண்டின் இடையில் வயது முதிர்வின் காரணமாக ஓய்வில் செல்ல அனுமதிக்கப்படின் கல்வியாண்டு முடியும் வரை அப்பணியிடம் பூர்த்தி செய்யப்படாத நிலையில் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையினை தவிர்க்கவும், மாணவர்களின் கல்வி நலன் கருதியும் கற்பித்தல் பணி பாதிக்கக் கூடாது என்பதை கருதியும் கடந்த ஆண்டுகளைப் போலவே ஆசிரியர்களுக்கு கல்வியாண்டின் இறுதி வரை மறுநியமன அடிப்படையில் பணிநீடிப்பு வழங்குவதற்கு அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்தது. மாணவர்களின் கல்வி நலன் கருதி, கற்பித்தல் பணிபாதிக்கக் கூடாது என்பதை கருதத்தில் கொண்டு, 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கல்வியாண்டின் கடைசி வேலை நாள் வரை (Upto the end of Academic Session) தேவைப்படும் ஆசிரியர்களுக்கு மறுநியமனம் வழங்க அரசு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2475/FS/P/2022, நாள் 23.06.2022இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள அனைத்துத் துறைத் தலைவர்கள்.

நகல்:-
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (கல்வி-II) துறை, சென்னை-9.
மனிதவள மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
அனைத்துப் பிரிவுகள், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
28/06/2022